JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**CC. 81/2016**

**A1, A2 present.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) the day of **18.02.2026.**

**P.W. 2 Name: Ramakrishnan S/o. கண்ணையன்**

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா. 2 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் M.E வரை படித்துள்ளேன். நான் கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். ஒரு குற்ற சம்பவம் நடந்தால் எவ்வாறு புகார் கொடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 07.06.2016 ம் தேதி சம்பவம் நடந்தது. எத்தனை மணி இருக்கும் என்றால் சுமார் 7.30 – 8.30 மணிக்குள் இருக்கும். எப்போது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் அன்று தாமதமானதால் மறுநாள் புகார் கொடுத்தேன். புகார் கொடுக்கும் போது பறிக்கப்பட்ட கொடி பற்றி குறிப்பிட்டு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் எப்போது எந்த வண்டியில் வந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் கேட்காததால் சொல்லவில்லை. போலீசார் விசாரணையில் தாலிக்கொடியின் மாடல் பற்றி சொன்னேனா என்றால் சொன்னேன் போலீசார் குறித்துக் கொண்டார்கள்.

2. போலீசார் மீண்டும் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் ஆகஸ்ட் மாதத்தில் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் எதிரியின் அங்க அடையாளங்கள் பற்றியும் எதிரிகள் எந்த வண்டியில் வந்தார்கள் என்பது பற்றியும்

சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அதை பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். சம்பவத்தின் போது எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் ஆமாம் கீழே விழுந்ததில் கையில் அடிபட்டது. எங்கு சிகிச்சை பெற்றேன் என்றால் சேலத்தில் சிகிச்சை பெற்றேன். எந்த மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் மருத்துவமனைக்கு செல்லவில்லை கட்டு போடும் இடத்தில் சிகிச்சை பெற்றேன். நான் சிகிச்சை பெற்ற விவரத்தை போலீசார் பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

3. நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வேறொரு வழியில் காணாமல் போன நகைக்காக போலீசார் அறிவுறுத்தலின் பேரில் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களிடம் இருந்து பறிக்கப்பட்டதாக சொல்லக்கூடிய நகைக்கும் வழக்கு சொத்துக்கும் வேறுபாடாக உள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை